[2011 பிப்ரவரி 5

காரணத்தாலே அவற்றை அறநிலையத் துறை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்மொழிவுகளைத் துறையின் அலுவலர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுப்பி வைத்தால் அதுபற்றிப் பரிசிலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி. ஆர். பிரேமா, அவையில் இல்லை.

வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

8—

திரைப்படம்

***16283—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக நாடுகளில் நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டிகளை திரைப்படமாகத் தொகுத்து கிராம இளைஞர்களுக்குக் காட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) உலக நாடுகளில் நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டிகளைத் திரைப்படமாகத் தொகுத்து கிராம இளைஞர்களுக்குக் காட்டுவது தொடர்பான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

2011 பிப்ரவரி 5]

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய செய்தித் துறை நிறுவனமும், மாநில செய்தித் துறை நிறுவனமும் சேர்ந்து தேசிய வரலாறு, உலக வரலாறு, நமது தேசியத்தின் வளர்ச்சி, இந்தியாவின் விளையாட்டுகள், உலக விளையாட்டுப் போட்டிகள், இயற்கைக் காட்சிகள், நீர்வீழ்ச்சிகள், நாட்டின் சாதனைகளையெல்லாம் தொகுத்து திரைப்படமாகத் தயாரித்து, அதை கிராமங்களிலும், பள்ளிகளிலும், முக்கிய சாலைப் பகுதிகளிலும் காட்டி வந்தன. இவற்றில் நேர்மை, உண்மை, புராண கால வரலாறுகள் எல்லாம் அடங்கும். இன்று இளைஞர்கள் மத்தியில் தேசப் பற்றும், விளையாட்டுப் போட்டியில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணமும் ஏற்பட்டு, உற்சாகம் ஏற்பட வேண்டுமென்று சொன்னால் உலக விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவினுடைய விளையாட்டுப் போட்டிகளையெல்லாம் திரைப்படமாகத் தொகுத்துக் காண்பித்தால் நன்றாக இருக்கும். இளைஞர்கள் உற்சாகம் அடைவார்கள். கிராமத்தில் இருக்கின்ற இளைஞர்கள் வேறு வழியிலே செல்லாமல் விளையாட்டிலே கவனம் செலுத்துவார்கள். ஆகவே, அரசு அதைப் பரிசீலிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, செய்தித் திரைப்படங்கள் காட்டும் பணி தமிழக அரசினுடைய ஒரு துறையான, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மூலமாகச் செய்யப்பட்டு வருகிறது. விளையாட்டின்மீது ஆர்வம் ஏற்பட, கிராமப்புறங்களிலும் அந்த விளையாட்டுகள் குறித்த செய்திகளை கிராம மக்களும் பார்க்க வேண்டுமென்ற அவருடைய நோக்கம் வரவேற்கத்தக்கது. உலக நாடுகளில் நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டிகளை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட ஒளிபரப்பாகவோ வெளியிடும்போது, அதனைக் குறுந்தகட்டில் நகல் எடுத்து அரசின்மூலமாக நடத்தப்பெறும் பயிற்சி முகாம்களில் பங்குபெறும் விளையாட்டு வீரர்களுக்கு CD Player – TV உதவியுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்மூலம் காட்டப்படுகிறது. அரசின் சார்பாக சென்னையில் நடைபெறும் பொருட்காட்சியிலும்

அரங்கம் அமைத்து அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் அது காட்டப்படுகிறது. குறிப்பாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தையும் உள்ளடக்கி, எல்லோரும் எல்லா செய்திகளையும், பொதுச் செய்தியை மட்டுமல்லாமல் விளையாட்டுச் செய்திகளையும் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அனைத்துத் தரப்பினருக்கும், குறிப்பாக கிராம மக்களுக்கு இலவசமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கியிருக்கிற காரணத்தால், அந்தக் தொலைக்காட்சிப் பெட்டிகளின் மூலமாக இன்று விளையாட்டுத் துறை சம்பந்தப்பட்ட படங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. அதன்மூலம் அவற்றைக் கண்டு களிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்து இதுபோன்ற நல்ல கருத்துகள் வரவேற்கத்தக்கவை என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

முற்பகல் 10–05

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளில் நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டிகளைத் திரைப்படமாகத் தொகுத்து கிராமங்களில் இருக்கின்ற இளைஞர்களுக்குக் காட்டினால், இளைஞர்கள் மத்தியிலே, விளையாட்டுப் போட்டிகள் மீது புதிய உற்சாகம் ஏற்படும்; இளைஞர்கள் விளையாட்டில் தனிக் கவனம் செலுத்துவார்கள். கிராமங்களில் சரியான மைதானங்கள் இல்லை. கிராமங்களில் விளையாடுவதற்கு இளைஞர்களுக்கு வாய்ப்புக் குறைவாக இருக்கிறது. ஆகவே உலகப் போட்டிகளைத் திரைப்படமாகத் தொகுத்து, கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு காட்டினால், இளைஞர்கள் மத்தியில் ஒரு புதிய வேகம், உற்சாகம் ஏற்படும்.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில், தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், நிச்சயமாக அடுத்த ஆட்சியும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய தலைமையில்தான் நடைபெறப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற ஆட்சியிலாவது இத்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர், இதே துறைக்கு வந்து, இதே பொறுப்பிலேயிருந்து,

கிராமங்களில் இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிப்பதற்குத் திரைப்படமாகத் தயாரித்துக் காட்ட முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமங்களில் விளையாட்டு மைதானங்கள் இல்லை என்று சுட்டிக் காட்டினார்கள். இந்தியாவிலேயே இல்லாத ஒரு திட்டமாக, நம்முடைய மாநிலத்தில அனைத்து கிராம மறுமலர்ச்சித் திட்டம் என்ற அரிய திட்டத்தை நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ஆர்வத்துடன் மேற்கொண்டு அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வரிடமும் அனுமதி பெற்று, இன்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலும் இத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே மிக முக்கியமான ஒரு அம்சம், கிராமங்கள் எல்லாவற்றிலும் ஒரு விளையாட்டு மைதானத்தை அமைப்பதாகும். அத்தகைய ஒரு குறிக்கோளோடு விளையாட்டு மைதானம் ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் சொன்னதுபோல அமைக்கப்படவிருக்கிறது. அந்த அடிப்படையிலே மத்திய அரசும் இன்றைக்கு 'பைகா திட்டம்' என்ற ஒரு திட்டத்தை, ஒவ்வொரு ஒன்றியத்திலேயும், ஒவ்வொரு கிராமத்திலும், ஐந்து இலட்சம் ரூபாயிலே ஒரு விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு வகுத்து, அதையும் மிக சீக்கிரத்தில் செயல்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம மக்கள் விளையாடுவதற்கு இடம் தேவை என்பதை மாண்புமிகு முதல்வர், அவர்கள் உணர்ந்திருக்கிற காரணத்தினால்தான், இன்றைக்கு விளையாட்டுத் துறையின்மூலம் கிராமப்புறங்களில் பயிற்சி அளித்து, அதன்மூலமாக வீரர்களைத் தேர்ந்தெடுத்து, அரசு தமிழக அளவிலே பரிசுகளும் வழங்கி, உற்சாகப்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விளையாட்டுப் போட்டிகளை ஊக்கப்படுத்துகின்ற வகையில் இந்த ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இன்னும் சில நாட்களில் கொடுக்கவிருக்கிற ஒரு கோடி ரூபாய் ஊக்கத் தொகை உட்பட இதுவரை கிட்டத்தட்ட ஐந்து

கோடியே தொன்னூற்றேழு இலட்சம் ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு பார்த்தாலும் நோய் ஏற்படக்கூடிய நிலையை நாம் தொடர்ந்து கண்ணுற்று வருகிறோம். குறிப்பாக, இருதய நோய், சர்க்கரை நோய், சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய் முதலிய பல்வேறு நோய்கள் குழந்தைப் பருவத்திலேயே வரத் தொடங்குகின்றன. மன அழுத்தம் காரணமாக, இரத்த அழுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் காரணம் உணவுப் பழக்கம் என்று சொல்கிறார்கள். சுற்றுச்சூழல், நிலம், குடிநீர், உணவு, சுவாசிக்கும் காற்று எல்லாம் மாசுபட்ட காரணத்தினாலே இவையெல்லாம் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. கோடிக்கணக்கிலே சுகாதாரத் துறைக்குச் செலவழிக்கிற அதேவேளையில் இந்த நோய்களையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு விளையாட்டு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. 'சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதமுடியும்' என்பதற்கேற்ப இன்று விளையாட்டு, உடற்பயிற்சி, யோகா போன்றவற்றால் இந்த நோய்களையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே மேலோங்கி வருகிறது. இதுகுறித்து இளைஞர்கள் மத்தியில், மாணவர்கள் மத்தியில், முதியோர்கள் மத்தியிலே மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அரசு இதுபற்றிய திரைப்படங்கள், குறுந்தகடுகள் தயாரித்து வெளியிடுவது, ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் அல்லது நகரத்தின் இரண்டு, மூன்று இடங்களில் உடற்பயிற்சி மற்றும் யோகா மையம் துவக்குவது போன்ற பல்வேறு திட்டங்களைச் செயலாற்றினால் விளையாட்டுத் துறையும் மேம்படும், மாணவர்கள் மத்தியிலே, இளைஞர்கள் மத்தியிலே விழிப்புணர்வு ஏற்பட்டு அவர்கள் விளையாட்டுப் பயிற்சியிலே, யோகா பயிற்சியிலே ஈடுபடுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையினால், இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

2011 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, உடல் ஆரோக்கியம் மிக அவசியம். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு எத்தனையோ நலத் திட்டங்களை வழங்கியிருக்கிறார்கள். அவர் வழங்கிய ஒவ்வொரு திட்டமும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் பயன்பெறும்வகையில் அமைந்திருக்கிறது.

முற்பகல் 10–10

சிறு வயதிலேயே பலருக்கு உடல் பாதிக்கப்படுவதாகச் சொன்னார்கள். சிறு வயதிலேயே ஊட்டச்சத்து தேவை; குழந்தைகளுடைய எலும்புகளும், உடல்களும் பலப்படும் என்கின்ற காரணத்தால்தான், வாரத்திற்கு 5 முட்டைகள் வழங்கப்படுகின்றன என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், சத்துணவிலே முட்டை வழங்கும் விழாவிலே சொல்லி வழங்கியிருக்கின்றார்கள். ஆகவே, சிறு வயதிலே உடல் திடமாக இருக்க வேண்டுமென்கின்ற நோக்கத்தில்தான் அதை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழக விளையாட்டு ஆணையத்தின் மூலமாக வழங்கப்படும் யோகா பயிற்சி பற்றி ஒரு கருத்தைச் சொல்கின்றேன். ஏற்கெனவே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட விளையாட்டு அரங்கங்களிலே இலவசமாக யோகா பயிற்சி தருவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலேயும் அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, விளையாட்டைப் பொறுத்தவரையில், எந்த அளவிற்கு இந்த ஆட்சியில் தலைவர் அவர்கள் அதில் அதிக கவனம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான் என்பதையும் இங்கே சொல்லி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தியாவிலே நடந்த காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளிலே, இந்தியா பெருமளவு, சுமார் 38 தங்கப் பதக்கங்களைக் குவித்திருக்கிறது. அதிலே தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள், இளம் பெண்கள் பெற்ற தங்கப் பதக்கங்கள்

மிகவும் குறைவு. அரியானா மற்றும் சிக்கிம் போன்ற வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்கள்கூட நிறைய தங்கப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக கிராமப்புறங்களிலிருந்து வந்த இளைஞர்கள்தான் இந்த ஆண்டு அந்தப் போட்டிகளிலே மிக அதிகமான தங்கப் பதக்கங்களைக் குவித்திருக்கிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அதைப்போல, தமிழகத்திலே இருக்கின்ற கிராமப்புற இளைஞர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலே பங்குபெற ஊக்குவிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எல்லோருக்கும் ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஊக்கத்தொகை, செஸ் போன்ற விளையாட்டுகளுக்கு அளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. நான்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். காமன்வெல்த் விளையாட்டிலே போட்டியிட்டு முதலிடம் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த அந்த இளைஞருக்கு அந்த ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை. ஏனென்றால், செஸ் என்கின்ற விளையாட்டு அதில் சேர்க்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைப்போன்ற இளைஞர்களை ஊக்குவிப்பதற்கும், கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிப்பதற்கும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு, பல்வேறு விளையாட்டுச் சங்கங்களுக்கு செலவாகின்ற தொகையிலே, ஒரு தொகையை மானியமாக வழங்கி வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், இதுவரை, வருடந்தோறும் டென்னிஸுக்கு ஒரு கோடி ரூபாயும், மற்ற விளையாட்டுகளுக்கென கிட்டத்தட்ட 3 கோடி ரூபாயும் கொடுத்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். செஸ் போன்ற விளையாட்டுகளுக்கு வழங்குவதில்லை என்று சொல்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு, செஸ் விளையாட்டிலே வெற்றிபெற்றவர்களுக்கும் Olympic Games, Non–Olympic Games ஆகிய வகைப்பாட்டிலே, குறிப்பாக

2011 பிப்ரவரி 5]

தமிழகத்தைச் சேர்ந்த வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய, தமிழகத்திலேயே பெரிய மாவட்டம் எங்களுடைய வேலூர் மாவட்டம். வேலூர் மாவட்டத்தில் Swimming Pool போன்ற வசதிகளைக் கொண்டிருக்கக்கூடிய ஸ்டேடியம் இதுநாள் வரை அமைக்கப்படவில்லை. தொடர்ந்து பலமுறை நான் இந்தச் சட்டமன்றத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், எப்படியாவது கூடிய விரைவிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே வருகின்றபோதே அடிக்கல் நாட்டிவிடலாம் என்று சொன்னார்கள். ஆனால், இன்னும் எங்களுடைய மாவட்டத்தில் ஸ்டேடியம் அமைக்காத சூழல் இருப்பதை மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் அமைக்கலாம் என்ற ஒரு கருத்தும் உள்ளது. அதேபோல, வேலூர் மாநகராட்சிக்குச் சொந்தமான 45 ஏக்கர், கழிவுநீர்ப் பண்ணையையொட்டியுள்ள இடம், காட்பாடியை ஒட்டியும், வேலூருக்கு நடுவிலும் இருக்கிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியுடன் அந்த இடத்தைப் பெற்றாவது, உடனடியாக அங்கே ஒரு ஸ்டேடியம் அமைப்பதற்கு மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு இப்போதே அறிவிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், வேலூருக்கு விளையாட்டு மைதானம் வேண்டுமென்பதைப் பற்றி கிட்டதட்ட ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்திலும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே அங்கே விளையாட்டு மைதானம் நம்முடைய அரசால் கொடுக்கப்பட்டதை, காவல் துறை தனியாகப் பயன்படுத்துகின்ற காரணத்தால், ஏற்கெனவே ஒரு இடத்தை மாவட்ட ஆட்சித்

தலைவர் மூலமாக பார்த்து, அந்த இடம் ஊரைவிட்டு சற்று ஒதுங்கிவிட்ட காரணத்தால் அது சரியில்லை என்று சொல்லப்பட்டு, இப்போது ஊருக்கு சமீபமாக இடம் வேண்டுமென்று கேட்டு, ஒரு விளையாட்டு மைதானம் அமைத்தால் எல்லோரும் விளையாடுவதற்கு வசதியாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்திலே, நான்கூட நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களோடு ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றபோதுகூட இந்தக் கோரிக்கையை அதே மேடையிலே வைத்து, அதற்கு நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகத்திலேயே ஒரு இடத்தை வாங்கிக் கொடுத்துவிடுகிறேன் என்ற உறுதிமொழியை அன்று உங்கள் முன்னாலேயே அளித்தார்கள்.

முற்பகல் 10–15

ஆகவே, இன்றைக்கு அந்த விளையாட்டு மைதானத்திற்காக நீங்கள் எந்த அளவுக்குக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறீர்களோ அந்த அளவுக்கு அம்மாவட்டத்தைச் சேர்ந்த நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் உறுதியாக அது நடைபெற்றுவிடும் என்பதைத் தெரிவித்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

9—

சாலைப் பாதுகாப்பு

***124567—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிழக்கு கடற்கரைச் சாலையில் சீக்கனாங்குப்பம் அருகில் அபாயகரமான வளைவுகளால் ஏற்படும் சாலை விபத்துகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?